மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : புளியங்குடி அரசு மருந்தகத்திற்கு ரூபாய் மூன்று இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்ட 1985–86 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணியாக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கட்டிடப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இந்தப் புளியங்குடி சுமார் 50 ஆயிரம் மக்கள், அதாவது ஜனத்தொகை கொண்ட இடம். எனவே, அங்கே 50 படுக்கைகள், ரத்தப் பரிசோதனை நிலையம், எக்ஸ்ரே பிரிவு, பிரசவ வசதிக்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களை விரிவுபடுத்தும்போது, இதுவும் கவனிக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் அரசு மருத்துவமனை ஆரம்பித்தல்.

110—(*வினா எண். 4305)—திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் அரசு மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

குளத்தூர் தொகுதி, பேராம்பூரில் புதிய சித்த மருத்துவமனை.

111—(*வினா எண். 10654)—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி பேராம்பூர் கிராமத்தில் ஒரு சித்த மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.